Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.23/2021

Deposition of PW 2 Witness for

| | | | |
|---|---|---|---|
| Name | : ஞா.துர்கா | Village | : |
| Husband's Name | : ஞானமுத்து | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 20th day of March 2025.

(A1 to A4 are present. A5 is absent and petition U/S.317 Cr.P.C. is allowed.)

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

எனது மகன் அஜித்குமார் இறக்கும்போது நான் சென்னை அண்ணா அலங்கார வளைவுக்கு அருகில் உள்ள என்.எஸ்.கே. நகரில் நானும் எனது மூத்த மகன் ராஜாவும் கட்டிட வேலை பார்த்து வந்தோம். சம்பவம் பற்றிய தகவலை எனது மருமகள் கீர்த்திகா எனக்கு கொடுத்தார். அப்போது காலை சுமார் 8.30 மணி

இருக்கும். என்.எஸ்.கே. நகரிலிருந்து நாங்கள் எங்களது வீட்டிற்கு சுமார் 45 நிமிடத்தில் வந்தடைந்தோம். அங்கிருந்து சுமார் 30 நிமிடத்தில் சம்பவம் இடம் சென்றிருப்போமா என்றால் ஆம். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும்போது அங்கு போலிசார் மற்றும் 40-45 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். பகல் 12.45 மணியளவில் காவல் நிலையத்திற்கு நான், எனது மருமகள் கீர்த்திகா மற்றும் ராஜா ஆகியோர் சென்றோம். போலிசார் என்னை விசாரித்து ஏதும் எழுதி வாங்கி கொண்டார்களா என்றால் இல்லை. இறந்துபோன எனது மகன் அஜித்குமார் மீது திருவேற்காடு மற்றும் சில காவல் நிலையங்களில் குற்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். அஜித்குமாரை பிணையில் எடுப்பது மற்றும் அவரின் வழக்குகளை நடத்துவது போன்றவற்றை கீர்த்திகா தான் பார்த்துக்கொள்வார் என்றால் சரிதான். கீர்த்திகாவின் பெற்றோர்களின் வீடு அரும்பாக்கத்தில் உள்ளதா, இல்லை. அவர்களின் வீடு திருவேற்காடில் உள்ள ஏழுமலை நகர் 2 வது தெருவில் உள்ளது. எனது மகன் அஜித்குமாரின் திருமணத்திற்கு பிறகு அவர் அவரது மனைவியுடன் தனியாக குடித்தனம் நடத்தி வந்தார். அஜித்குமார் வேலைக்கு சரிவர சென்று வந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர் பெயிண்டிங் வேலை பார்த்து வந்தார். அவர் உள்ளூரில் தான் அந்த வேலை பார்த்து வந்தார். எந்த இடத்தில் பார்த்து வந்தார் என குறிப்பாக தெரியாது. அஜித்குமார் என்னையும் எனது கணவரையும் தினசரி வந்து பார்ப்பார். அஜித்குமார் தினசரி யாரை பார்ப்பார் எங்கு இருப்பார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது.